# 6 காந்தியடிகள் கடிதம்


**மோகனதாஸ் கரம்சந்த் காந்தி**

இவர் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள 'போர்பந்தர்' எனும் ஊரில் 2.10.1869 இல் பிறந்தார். அறவழிப் போராட்டம் (சத்தியாக் கிரகம்) மூலம் இந்தியாவின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தார். கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ''மகாத்மா'' எனும் பட்டத்தை காந்திக்கு வழங்கினார். 'சத்திய சோதனை' எனும் சுயசரிதை நூலையும் எழுதியுள்ளார்

(1922 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், பதினான்காம் திகதி, ஏரவாடாச் சிறையிலிருந்து காந்தியடிகள் ஹகீம் அலஜ்மல்கான்சு என்பவருக்கு எழுதிய கடிதம்)

ஏரவாடாச் சிறை,
1922.04.14

அன்புள்ள ஹகீம்ஜி,



நான் சிறையிலே தனியாக வைக்கப்பட்டிருக்கிறேன் என்று சொன்னது, ஏதோ குறையாகச் சொல்லப்பட்டதன்று. நான் இங்கே மகிழ்ச்சியாகவே இருக்கின்றேன். நான் தனிமையையே விரும்புகின்றேன்; நான் அமைதியை விழைகிறேன். இப்பொழுது எனக்குப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

என்னுடைய சிறைவாழ்வில் நான் ஒவ்வொருநாளும் என்ன செய்கிறேன் என்பதைச் சொல்லி இக்கடிதத்தை முடித்துவிடுகிறேன்.

எனது அறை சுத்தமாகவும் காற்றோட்டமாகவும் இருக்கிறது, திறந்த வெளியில் படுக்க எனக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இது எனக்கு ஒரு வரப்பிரசாதம்போல இருக்கிறது.

காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனைக்கு எழுந்து விடுகிறேன். நான் இங்கே கூடப் பிராத்தனையைக் கைவிட்டு விடவில்லை என்பதை அறிந்தால் சத்தியாக்கிரக ஆச்சிரமவாசிகள் மகிழ்ச்சியடைவார்கள். பிறகு ஆறரை மணிக்குப் படிக்க ஆரம்பிக்கிறேன். விளக்கு வைத்துக் கொள்ள எனக்கு அனுமதி கிடையாது. அதனாலேதான் வெளிச்சம் ஏற்பட்டவுடனேயே என் வேலையை ஆரம்பிக்க முடிகிறது. மாலை ஏழு மணிக்கு இருள் சூழ்ந்தவுடன் என் வேலையை முடித்துக் கொள்கின்றேன். இரவு எட்டு மணிக்குப் பிரார்த்தனை செய்துவிட்டுப் படுக்கைக்குப் போகிறேன். தினம் ஆறு மணிநேரம் படிக்கிறேன். நான்கு மணி நேரம் இராட்டை சுற்றுவதிலும், பஞ்சடிப்பதிலும் கழிகிறது.

அன்றாட வேலையை ஒழுங்காகச் செய்வதற்கு அனுகூலமாக மூன்று வேளைச் சாப்பாட்டை இரண்டு வேளையாகக் குறைத்துக் கொண்டிருக்கிறேன். இது எனக்குச் சௌகரியமாகவே இருக்கிறது. சிறை அதிகாரி ஆகார விடயத்திலே தாராள மனப்பான்மையுடன் நடந்துக் கொள்கிறார். சென்ற மூன்று நாட்களாக ஆட்டுப்பாலும் வெண்ணெயும் கிடைக்கின்றன. இன்னுஞ் சில நாள்களில் எனக்கு வேண்டிய உரொட்டியை நானே தயாரித்துக் கொள்வேன்.

இரண்டு கம்பளிகளும் ஒரு பாயும் இரண்டு துப்பட்டிகளும் என்னிடம் ஒப்புவித்திருக்கிறார்கள். இப்பொழுது ஒரு தலையணையையும் கொடுத்திருக்கிறார்கள். அஃதின்றியே நான் தூங்க முடியும். புத்தகங்களையோ துணிகளைச் சுருட்டியோ இதுவரையில் என் தலைமாட்டுக்கு வைத்திருந்தேன். ஆனால், இராஜகோபாலாச்சாரியார் எனக்கு ஒரு தலையணை கிடைக்குமாறு தமது செல்வாக்கையெல்லாம் உபயோகித்தார். என்னுடைய உபயோகத்துக்கென்று தனியாக ஒரு குளிக்கும் அறையும் ஒதுக்கியிருந்தார்கள். அதற்குப் பூட்டும் சாவியும் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய உபயோகத்துக்கென்று தனியாக ஓர் அறை ஒதுக்கப் பெற்றிருக்கிறது. மற்றவர்கள் உபயோகப்படுத்தாத சமயத்தில் அதை நான் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். சுகாதார

ஏற்பாடுகளும் இப்பொழுது விருத்தியடைந்திருக்கின்றன. ஆகையால், என் நண்பர்கள் என்னைப்பற்றிக் கவலைப்படல் வேண்டாம். நான் ஒரு பறவையைப்போல் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். சிறைக்கு வெளியே இருந்ததைக் காட்டிலும் இங்கே குறைவான வேலையைச் செய்கிறேன் என்று நான் நினைக்கவில்லை. இந்தச் சிறைவாசம் எனக்கு ஒரு பள்ளிக்கூடம் மாதிரி.

என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எவ்வித அச்சமுமில்லை. ஆகையால் வெளியுலகத்திலே என்ன நடைபெறுகிறது என்று அறிந்துகொள்ள எனக்கு ஆவல் இல்லை. என்னுடைய பிரார்த்தனை உண்மையானதாய் இருக்குமானால் - நிருமலமான மனத்திலிருந்து வெளிவருமானால் - அது வெளியிலே ஆடம்பரமாகத் தோன்றும் காரியங்களை விடச் சிறந்தது. இவ்விடயத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு.

இப்படிக்கு,
கரம்சந்த் காந்தி.

**அரும்பதங்கள்**

நிருமலமான - பரிசுத்தமான
இராட்டை - நூல் நூற்கும் பொறி
பஞ்சடித்தல் - உபசாரமாய்ப் பேசுதல்,விரிவாய்ப் பேசுதல்
சௌகரியம் - சுகம்,வசதி
ஆகாரம் - உணவு
அனுகூலம் - நன்மை


**கிரகித்தல் பயிற்சி**

1. காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலை எது?
2. காந்தி அடிகள் கையாண்டுள்ள கடித உறுப்புகள் எவை?
3. காந்தியடிகள் இரண்டு வேளை சாப்பிடக் காரணம் என்ன?
4. சிறைச்சாலையில் காந்தியடிகளுக்கு செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் எவை?
5. இக்கடிதத்தில் கையாளப்பட்டுள்ள உவமைத் தொடரை எடுத்துக் காட்டுக.
6. இப்பாடப் பகுதியிலிருந்து வெளிப்படும் விழுமியக் கருத்துகளைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

*1. உமது பாடசாலையில் ஆறாந் தரம் படிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக்காட்டி உமது நண்பன் அல்லது நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.*

## உறவு முறைக் கடிதத்தின் அமைப்பு




*1. முகவரியும், திகதியும்*
*2. விளிப்பு*
*3. அ) சுகம் விசாரித்தல், ஆ) செய்தி*
*4. முடிப்பு (இப்படிக்கு, அன்புள்ள)*
*5. ஒப்பம்*

# எதிர்ப்பாற் சொற்கள்

எதிர்ப்பாற் சொற்கள் என்பது ''ஆண்பாலுக்குரிய பெண்பால் சொற்கள் அல்லது பெண்பாலுக்குரிய ஆண்பால் சொற்கள்'' ஆகும்.

**உயர்திணைக்குரிய எதிர்ப்பாற் சொற்கள்**

1. அப்பா - அம்மா
2. தம்பி - தங்கை
3. மாமா - மாமி
4. மச்சான் - மச்சாள்
5. தலைவன் - தலைவி
6. பாடகன் - பாடகி
7. கணவன் - மனைவி
8. கூலிக்காரன் - கூலிக்காரி
9. தபுதாரன் - விதவை
10. மாணவன் - மாணவி

**அஃறிணைக்குரிய எதிர்ப்பாற் சொற்கள்**

1. களிறு - பிடி
2. நாம்பன் - நாகு
3. எருது - பசு
4. கலை - பிணை
5. சேவல் - பேடு

## பயிற்சி

அ. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை இணைக்குக.

| | | |
|---|---|---|
| 1. | தாத்தா | பெரியம்மா |
| 2. | செல்வன் | மகள் |
| 3. | பெரியப்பா | பேத்தி |
| 4. | தமையன் | மாதா |
| 5. | திருடன் | புத்திரி |
| 6. | பாடகன் | பாட்டி |
| 7. | பிதா | செல்வி |
| 8. | புத்திரன் | பாடகி |
| 9. | பேரன் | திருடி |
| 10. | மகன் | தமக்கை |

ஆ. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

| | | |
|---|---|---|
| 1. | களிறு | 6. பாடகன் |
| 2. | நாகு | 7. மகள் |
| 3. | சேவல் | 8. பெரியப்பா |
| 4. | மந்தி | 9. அரசன் |
| 5. | எருது | 10. மாதா |

## செயற்பாடு

உமது சூழலில் உள்ள எதிர்ப்பாற் சொற்களை இனங்கண்டு எழுதுக.